# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.100/2025 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 05 ( PW– 05 ) |
| பெயர் | :– | ரஞ்சித் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | மாதேஷ் |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி நேர்நிறுத்தப்பட்டார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் சேலம், ஓமலூர் வட்டத்தில் தொளசம்பட்டி மனக்காட்டூரில் வசிக்கிறேன். நான் செங்கல் சூளையில் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 02-ஆம் சான்றொப்பம் என்னுடை -யதுதான். 10.10.2024-ஆம் தேதியன்று நான் வேலைக்கு சென்றுவிட்டு என் நண்பர் வினோத்துடன் தொளசம்பட்டியில் பள்ளிக்கூடம் இருக்கும் இடத்தை கடந்து உள்ள சரவணா என்ற கடைக்கு சென்றுகொண்டிருந்தோம். அப்போது நேரம் இரவு 08.45 மணி இருக்கும். பள்ளிக்கூடத்திற்குமுன் காவல் துறையை சேர்ந்தவர்கள் இருந்தனர். அங்கு படம் வரைந்துகொண் டிருந்தனர். சம்பவம் நடந்தது தெரியுமா என்று கேட்டனர். சிவக்குமாரை கனகராஜ் வெட்டியது தெரியுமா என்றார்கள். தெரியும் என்று சொன்னோம். எதிரில் காய்கறி கடை உள்ளது. பக்கத்தில் வீடும் உள்ளது. நியாயவிலை கடையும் உள்ளது. என்னிடமும் வினோத்திடமும் கையொப்பம் கேட்டனர். நாங்கள் போட்டோம். பார்வை மகசர் **அ.சா.ஆ-02** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுச் சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சிவக்குமாரை எப்படி தெரியும் என்றால் பங்காளி உறவுமுறை. சம்பவத்தைபற்றி எனக்கு யார் சொன்னது என்றால் யாரும் சொல்லவில்லை. நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் பார்வை மகசரில் கையொப்பம்

போடவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District & Session Judge,
Salem.